5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கை அளித்தல். (குறுக்கீடுகள்) Agenda-விலுள்ள அடுத்த அலுவலுக்குச் சென்றுவிட்டேன். நீங்கள் இப்போது வந்து கேட்பது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்). இது சரியல்ல. முறையல்ல. (குறுக்கீடுகள்) இது ஒரு சரியான முன்னுதாரணம் இல்லை. உட்காருங்கள். நான் அடுத்த அலுவலுக்குப் போய் நிறைய நேரம் ஆகிவிட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்போது நிரம்ப பேச முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேண்டுகோளை பிறகு தனியாக வந்து சொல்லுங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) இதுவெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் வேண்டுகோள் இல்லை. உட்காருங்கள். பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அதுபோன்று வழக்கம் இல்லை. அது மாதிரி மரபு இல்லை. உட்காருங்கள்.*

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.*

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 173 முதல் 192 வரையிலான 20 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.*